பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

18 08 2026 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தில்லியில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த கணக்கெடுப்பு பணிகள் நேற்றுடன் நிறைவடைந்தது.

2. ஜார்கண்டில் மாணவர்களின் போராட்டத்தையடுத்து, 2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அனைத்து போட்டித் தேர்வுகளையும் அம்மாநில அரசு ரத்து செய்துள்ளது.

3. ஒடிசாவின் வடக்குப் பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் சுமார் 8 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

4. ஹோர்முஸ் நீரிணை விவகாரம் தொடர்பாக ஈரானுடன் ஒப்பந்தம் மேற்கொண்டால் குண்டுவீசி தாக்குதல் நடத்தப்படும் என்று ஓமன் நாட்டை அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

5. உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கவிப்பிரியா செல்வம் - சிம்ரன் சிங்கி இணை இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தில்லியில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த கணக்கெடுப்பு பணிகள் நேற்றுடன் நிறைவடைந்தது.

இப்பணியின்போது சுமார் ஒரு கோடியே 45 லட்சம் படிவங்கள் விநியோகிக்கப்பட்டதாகவும், 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை அதிகாரிகள் வீடுகளுக்குச் சென்று வழங்கியதாகவும் தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் குறித்து இம்மாதம் 24ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 23ஆம் தேதி வரை தெரிவிக்கலாம் என்று அவர் கூறியுள்ளார்.

இறுதி வாக்காளர் பட்டியல் அக்டோபர் 27ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

போதைப்பொருட்கள் குறித்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட வெளிநாட்டவர்களுக்கு கடும் நிபந்தனையுடன் ஜாமீன் அளிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சஞ்சய் கரோல், ஆகியோர் அடங்கிய அமர்வு, ஜாமீனில் விடுவிக்கப்படும் வெளிநாட்டவர்கள் தங்களது பாஸ்போர்ட்டை சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், முன் அனுமதியின்றி இந்தியாவை விட்டு வெளியேறக்கூடாது என்றும் தெரிவித்துள்ளது.

அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் ஒரு வாரத்திற்குள் வெளிநாட்டவர் பிராந்திய பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்றும் கூறினர்.

ஜாமீன்தாரர்கள் போலியானவர்கள் என கண்டறியப்பட்டால், அவர்களை சரிபார்க்கும் பணியில் ஈடுபட்ட மத்திய, மாநில அரசு அதிகாரிகள் துறை ரீதியான விசாரணைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் அரசுப் போட்டித் தேர்வுகளில் முறைகேடு நடைபெறுவதாக கடந்த 24 நாட்களாக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதையடுத்து, 2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அனைத்து போட்டித் தேர்வுகளையும் அம்மாநில அரசு ரத்து செய்துள்ளது.

முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

2014ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற ஜார்கண்ட் அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் ஜார்கண்ட் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வுகள் குறித்து விரிவாக விசாரணை மேற்கொள்ளவும் அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

கேரளம் விழிஞ்ஞும் துறைமுகத்தில் இருந்து இன்று முதல் நேரடி ஏற்றுமதி இறக்குமதி சேவைகள் தொடங்குகிறது.

இன்று காலை நடைபெறும் நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. V.D. சதீஷன் இந்த சேவையை தொடங்கி வைக்கிறார்.

மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ராணுவ தலைமைத் தளபதி தீரஜ் சேத்-திற்கு நேபாள ராணுவத்தின் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

காத்மாண்டுவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நேபாள ராணுவ தலைவர் திரு. Ramchandra Paudel இவ்விருதை வழங்கினார்.

நேபாளத்தில் பயணம் மேற்கொண்டு வரும் ராணுவ தலைமைத் தளபதி திரு. தீரஜ் சேத், அந்நாட்டு ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் Ashokraj Sigdel உடன் இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தார்.

அத்துடன் நேபாள ராணுவத்தினருக்கான உபகரணங்களையும் ஜெனரல் தீரஜ் சேத் வழங்கினார்.

<<<<>>>>

நாட்டின் பாதுகாப்பிற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் SSB படையினரின் நலனில் மத்திய அரசு அக்கறை கொண்டுள்ளதாக உள்துறை இணையமைச்சர் திரு. பண்டி சஞ்சய் குமார் கூறியுள்ளார்.

ஹைதராபாத் இப்ராஹிம்பட்டினத்தில் அப்படையினருக்காக புதிதாக கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை அவர் திறந்து வைத்தார்.

SSB படையினருக்காக இதுவரை 10 ஆயிரத்து 29 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் திரு. பண்டி சஞ்சய் குமார் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல்வேறு இடங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் மண்டி மாவட்டத்தின் Kataula பகுதியில் அதிகபட்சமாக 7 புள்ளி நான்கு சென்டி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக 87 சாலைகள் மூடப்பட்டுள்ளன.

மழை தொடர்பான சம்பவங்களால் அம்மாநிலத்தில் இதுவரை 80 பேர் உயிரிழந்துவிட்டனர்.

சுமார் 994 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் சேதமடைந்துள்ளன.

இதற்கிடையே Bilaspur, Kangra, Mandi, Sirmaur ஆகிய நான்கு மாவட்டங்களில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று சிம்லா வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஒடிசாவின் வடக்குப் பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 6 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆயிரத்து 304 கிராமங்களில் வசிக்கும் சுமார் 8 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவு, குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், மின்சேவை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுமார் 42 ஆயிரம் ஹெக்டேர் பயிர் நிலங்கள் சேதடைந்துள்ளன.

Baitarani, Brahmani மற்றும் Salandi ஆறுகளின் நீர்மட்டம் அபாயகட்டத்தை தாண்டியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட Bhadrak மற்றும் ஜெய்ப்பூர் மாவட்டங்களை ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி ஹெலிகாப்டர் மூலம் சென்று பார்வையிட்டார்.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

இதற்கிடையே ஜார்கண்ட் மாநிலத்தில் இன்று மிக கனமழை முதல் அதிகனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம தெரிவித்துள்ளது.

பிஹார், சத்தீஸ்கட், மத்தியப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதி, உத்தரப்பிரதேசத்தின் மேற்குப் பகுதி ஆகிய இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று கூறியுள்ளது.

மீனவர்கள் அரபிக் கடல் மற்றும் வங்கக் கடல் பகுதிகளுக்கு இன்று செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணை விவகாரம் தொடர்பாக ஈரானுடன் ஒப்பந்தம் மேற்கொண்டால் குண்டுவீசி தாக்குதல் நடத்தப்படும் என்று ஓமன் நாட்டை அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளரிடம் பேசிய அவர், மேற்காசியாவில் நடைபெற்று வரும் மோதலை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ஈரானுடன் மேற்கொள்ளப்பட்ட 60 நாட்கள் ஒப்பந்தம் காலாவதியாக உள்ள நிலையில் அடுத்து மேற்கொள்ளப்பட உள்ள சூழல் குறித்து தெரிவித்தார்.

ஈரான் சரணடைவதற்கு கெடு எதுவும் தாம் விதிக்கவில்லை என்று அவர் கூறினார்.

ஈரான் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் அமெரிக்க கடற்படையினர் அந்நாட்டின் மீது தொடர்ந்து பொருளாதார ரீதியாக அழுத்தத்தை ஏற்படுத்தி வருவதாக திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

<<<<>>>>

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கவிப்பிரியா செல்வம் - சிம்ரன் சிங்கி இணை இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 22-20, 21-14 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் Nikol Carulla - Carman Maria Jimenez இணையை வென்றது.

-----------------

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

நெதர்லாந்தின் Amstelveen நகரில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை 6.30க்கு தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து 4-2 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

----------

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Madhwin Kamath - Atharva Sharma இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-2, 7-6 என்ற செட் கணக்கில் ஸ்பெயின் இணையை வென்றது.

-------------

செக் குடியரசில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர் 7-6, 6-4 என்ற செட் கணக்கில் பிரேசிலின் Edvardo Ribeiro-வை வென்றார்.

---------------

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

---------------

ஆசிய ஓபன் ஸ்கேட்டிங் போட்டி டேராடூனில் நேற்று தொடங்கியது.

14 நாடுகளைச் சேர்ந்த் 272 வீரர்கள் இதில் பங்கேற்றுள்ளனர். இந்தியாவின் சார்பில் 130 வீரர்கள் இப்போட்டியில் கலந்துகொண்டுள்ளனர்.

நாளை மறுநாள் வரை இப்போட்டி நடைபெற உள்ளது.

<<<<The End>>>>